# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஏப்ரல் திங்கள் 20–ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. P.R.பாபு, உதவி திட்ட அமைப்பாளர் | 1/2007<br>2/2007<br>3/2007 | 99/–<br>198/–<br>198/– |
| 2 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 3/2007 | 483/– |
| 3 | திருமதி. அ. நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 3/2007 | 120/– |
| 4 | திரு.எஸ்.ஜே. இராஜ் குமார், இளநிலை உதவியாளர் | 3/2007 | 1219/– |
| 5 | திரு.எம். ஸ்டீபன், வருவாய் உதவியாளர் | 3/2007 | 102/– |
| 6 | திரு.எஸ்.கணேசன், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 3/2007 | 2457/– |
| 7 | திரு.ஆர்.தங்கராஜ், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 3/2007 | 387/– |
| 8 | திருமதி.கே.மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 3/2007 | 208/– |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 164 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் சுனாமி பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி. டி.எஸ். சோபா, பணி ஆய்வர் | 3/2007 | 3572/– |
| 2. | திருமதி. எம். சாந்தி, சமுதாய அமைப்பாளர் | 3/2007 | 357/– |

**அ.குறிப்பு :** சுனாமி நிதியில் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 165 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியின் மன்ற உறுப்பினர்களுக்கு மன்ற உறுப்பினர் விபரக் கையேடு ( Councillor's Directory) வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6591/2007/WB2 நாள் 30.03.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் ஒரு கையேட்டின் விலை ரூ. 872/– ஆகும். நமது நகராட்சிக்கான ஒதுக்கீடு தெரிவிக்கப்பட்டுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 26 ஆகும். எனவே மேற்படி தொகையினை 26 x 872 = 22672 நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அ.னுமதி பெற்று ரூ.22672/– னை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வரைவோலையாக செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 166 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

2007–2008–ம் ஆண்டிற்குரிய பஸ் பீஸ் வசூலிக்கும் உரிமம், பிஸ்மாங்கர் பீஸ், பஸ் நிலைய கட்டண கழிப்பிடம் மற்றும் அண்ணாசிலை அருகாமை கட்டண கழிப்பிடம் ஆகியவற்றின் குத்தகைதாரர்கள் ஏலத்தொகை முழுவதையும் ஒரே தவணையில் செலுத்தாத காரணத்தால் துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பேரில் தேவையான ரசீது புத்தகங்கள் அவசரம் கருதி உள்ளூர் அச்சகத்தில் அச்சிட்டு பெறப்பட்ட வகையில் ரூ. 940/– செல்வி அச்சகத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 167 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

2007–2008–ம் ஆண்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை உரிம இனத்தினை 21.04.2007 முதல் அனுபவித்திட 09.04.2007 அன்று மறு ஏலம் விடப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை உரிம இனம் | உயர்ந்நத ஏலக் கேள்விதாரர் பெயர் | உயர்ந்த ஏலக் கேள்வித் தொகை ரூ. | 2006–07–ம் ஆண்டின் குத்தகை உரிமத் தொகை ரூ. | மூன்று வருட சராசரி ரூ. |
|---|---|---|---|---|---|
| | நகராட்சி காமராஜ் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | திரு. T.தனபால் | 1.60.050/– | 2.20.000/– | 1.89.217/– |

**அ.குறிப்பு** :மேற்படி பேருந்து நிலைய கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.07 முடிய மூன்று முறை பொது ஏலம் விடப்பட்டும் யாரும் ஏலம் கேட்க முன்வராததால், மேற்படி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01.04.07 முதல் அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், 20.04.07 முடிய அலுவலகம் மூலம் வசூல் ஆகும் உத்தேச தொகை ரூ. 11,820/– வுடன் திரு. T. தனபால் என்பவரால் கேட்கப்பட்டுள்ள உயர்ந்த ஏலக் கேள்வித் தொகை ரூ. 1,60,050/–ம் சேர்த்தால் மொத்தம் ரூ. 1,71,870/– வரும் என்பதும், நான்கு முறை ஏலம் விடப்பட்டும் ஏலக்கேள்வி கேட்க யாரும் முன்வராத நிலையில் 5–வது முறையாக விடப்பட்ட பொது ஏலத்தில் தான் மேற்படி திரு. T. தனபால் என்பவரால் உயர்ந்த ஏலக்கேள்வியாக ரூ. 1,60,050/– க்கு கேட்டுள்ளார் என்பதும், தொடர்ந்து அலுவலகம் மூலம் வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லை என்பதும் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். 168 லேலத்தினை உறுதி செய்து கட்டண வசூல் செய்யவும் உரிமை வழங்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

2007–2008–ம் ஆண்டிற்கு இந்நகராட்சியின் தெருவிளக்குகள் பராமரிப்பிற்கு தேவையான பொருட்களை வாங்கிட உத்தேச செலவு ரூ. 4.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 169 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

2006 உள்ளாட்சி தேர்தலில் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு வாகனம் ஓட்டிய வகையில் 10 தினங்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ. 90/– வீதம் வழங்க அரசாணை எண். 4/ 76/2006 உள்ளாட்சித் தேர்தல் நாள் 26.02.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இந்நகராட்சி தேர்தல் நடத்திய அலுவலருக்கு 10 தினங்கள் வாகனம் ஓட்டிய வகையில் ரூ. 900/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு ரூ. 900/– வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 170 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

2007–2008–ம் ஆண்டிற்கு இந்நகராட்சியின் பொதுப் பிரிவிற்கு எழுது பொருட்கள், பதிவேடுகள் வாங்கிட உத்தேச செலவு ரூ. 2.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.171 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி கணனிப் பிரிவில் இயங்கி வந்த A.C. ( குளிரூட்டி) திடீரென பழுதுபட்டதால் அதனை சரி செய்வதற்கான செலவினம் ரூ. 2000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினம் ரூ. 2000/– னை சம்மந்தப்பட்டவருக்கு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 172 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து நிலைய கடைகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்குரிய கடைகள் உரிம காலம் 31.03.2007 உடன் முடிவடைவதால் உரிமம் பெற்றுள்ள கடைதாரர்கள் தங்களுக்கே மீண்டும் மூன்று வருடத்திற்கு வாடகை உயர்வு செய்து வழங்க கேட்டுக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும். தற்போதைய மாத வாடகை மற்றும் 15% உயர்வு செய்த வாடகை ஆகியவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**காமராஜ் பேருந்து நிலைய கடைகளின் விபரம்**

| வ. எண். | கடை எண். | உரிமைதாரரின் பெயர் | தற்போதைய வாடகை தொகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1 | வி. மைதீன்கான் | 1520 | 1748 |
| 2 | 2 | வி. மைதீன்கான் | 1418 | 1631 |
| 3 | 3 | எஸ். ஜெயமலர் | 1337 | 1538 |
| 4 | 4 | கே. நூர்முகம்மது | 1762 | 2027 |
| 5 | 5 | எம்.ஜெ. தார்ச்சீஸ் | 1114 | 1282 |
| 6 | 6 | பி. ஷாகுல் அமீது | 1110 | 1277 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 7 | பி. முகம்மது மிக்தாத் | 943 | 1085 |
| 8 | 9 | எ.எம். சுகைபு | 1417 | 1630 |
| 9 | 11 | எம். மாகீன் | 869 | 1000 |
| 10 | 12 | எஸ். முகம்மது காசீம் | 754 | 868 |
| 11 | 13 | வி.ருத்ரபிரசாதன் தம்பி | 754 | 868 |
| 12 | 14 | எம். ஐயப்பன் | 754 | 868 |
| 13 | 15 | எம். ஐயப்பன் | 754 | 868 |
| 14 | 16 | சி. முருகன் | 468 | 539 |
| 15 | 17 | எஸ். ராஜ சார்லெட் செல்வி | 518 | 596 |
| 16 | 18 | வி. பத்றோஸ் | 518 | 596 |
| 17 | 19 | டி. கோவிந்தராஜ் | 476 | 548 |
| 18 | 20 | எ. ஜெயசேகர் | 442 | 509 |
| 19 | 21 | ஆர். பாலன் | 458 | 527 |
| 20 | 22 | எ.எம். பதறுதீன் | 442 | 509 |
| 21 | 24 | எல். வினிஸ்டர் | 500 | 575 |
| 22 | 25 | எல். வினிஸ்டர் | 500 | 575 |
| 23 | 26 | எஸ். முருகன் | 442 | 509 |
| 24 | 27 | ஜே. ஆன்றனி | 485 | 558 |
| 25 | 28 | ஜே. ஆன்றனி | 442 | 509 |
| 26 | 29 | என். ஐயப்பன் | 442 | 509 |
| 27 | 31 | தீயணைப்பு ஊர்தி | 730 | 840 |
| | **சுய உதவிக் குழு கடைகள்** | | | |
| 1 | 1 | ஸ்டார் குழு | 300 | 345 |
| 2 | 2 | சங்கு புஷ்பம் | 300 | 345 |
| 3 | 3 | சரஸ்வதி குழு | 300 | 575 |
| 4 | 4 | லெட்சுமி குழு | 300 | 345 |

**தீர்மானம் எண். 173 பொருளில் குறிப்பிட்டவாறு 15% உயர்வு செய்து கீழ்க்குறிப்பிட்ட உரிமம் தாரர்களுக்கு அடுத்த மூன்றாண்டு காலத்துக்கு உரிமம் நீட்டிப்பு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாகத்தில் கடை எண்.15 மற்றும் 16 ஆகிய கடைகளில் நீர் கசிவு ஏற்பட்டு அதனால் கடைக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று கடை வாடகைதாரர்களிடம் இருந்து எழுந்த புகாரின் பேரில் அதனை சரி செய்ய நகர்மன்றத் தீர்மானம் எண். 124, நாள் 28.02.2007–ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட பணிக்கு 10.04.07–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வருமாறு.

1. திரு.பி. தங்கமணி – 0.15% மதிப்பீட்டை விட குறைவு.
2. திரு.எஸ்.சிவதாணுமாலையன் – 0.95% மதிப்பீட்டை விட அதிகம்.

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி. தங்கமணி என்பவர் 0.15% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அ.குறிப்பு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.தங்கமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 174 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட _காமராஜர் பேருந்து நிலையத்தில் இரவு நேரங்களில் வெளிச்சம் குறைவாக உள்ளது. ஆகவே பேருந்து நிலைய வளாகத்தில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மூன்று எண்ணம் ( Metal Halogen Lamp) விளக்குகள் அமைப்பதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 15,000/–க்கு நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 161, நாள் 30.03.2007–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட மூன்று எண்ணம் ( Metal Halogen Lamp) விளக்குகள் வாங்குவதற்கு 10.01.2007–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வருமாறு :

1. கே.எஸ். எலக்ட்ரிக்கல்ஸ் – ரூ. 14895/– (0.70% மதிப்பீட்டைவிட குறைவு)
2. இம்டெக் மார்கெட்டிங் சிஸ்டம் – ரூ. 14970/– 0.20% மதிப்பீட்டைவிட குறைவு)

இதில் கே.எஸ். எலக்ட்ரிக்கல்ஸ் 0.70% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

அ.குறிப்பு : இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கே.எஸ். எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 175 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஒவ்வொரு வார்டுகளில் உள்ள சாலைகளின் விபரத்தினை கலர் வரைபடத்தில் தயார் செய்து சி.டி.யுடன் உடனே அளிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 50289/05/எப்3 நாள் 27.03.2007–ல் தெரிவித்துள்ளபடி நகராட்சியிலுள்ள ஒவ்வொரு வார்டுகளுக்கும் தனித்தனியாக கலர் வரைபடம் மூன்று செட்கள் மற்றும் சி.டி. தயார் செய்வதற்கும் ஆகும் செலவு தொகை ரூ. 7000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 176 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஏப்ரல் திங்கள் 20–ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

தற்போது பெய்த கோடை மழை காரணமாக சாஸ்தாங்கரை, மெயின்ரோடு மற்றும் குளச்சல் பிரதான சாலை, வி.கே.பி. பள்ளி அருகில் ஆகிய பகுதிகளில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடி தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் சூழ்ந்தது. பருவமழை தொடரும் பட்சத்தில் சாஸ்தாங்கரை மெயின்ரோடு மற்றும் வி.கே.பி. பள்ளி பின்புறம் ஆகிய பகுதிகளில் குடியிருப்போர் மிகவும் பாதிப்புக்குள்ளாவார்கள். எனவே இப்பகுதிகளில் J.C.B. இயந்திரத்தைக் கொண்டு சாலையின் பக்கங்களில் மண் கால்வாய் வெட்டிவிட வேண்டியுள்ளது. எனவே, இதற்காக உத்தேச செலவுத் தொகை ரூ. 23,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியமாக இப்பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 177 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 2**

கடந்த கோடை மழையின்போது வி.கே.பி. பள்ளி அருகில் மற்றும் சாஸ்தாங்கரை பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் சூழ்ந்ததின் காரணமாக போர்க்கால அடிப்படையில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று J.C.B. இயந்திரத்தைக் கொண்டு சாலையின் பக்கங்களில் மண் கால்வாய் வெட்டி பணி மேற்கொண்டதன் பேரில் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் 18.04.2007 அன்று கோரப்பட்டன. அதன்பேரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு :

1) திரு. ராதாகிருஷ்ணன் – 18% மதிப்பீட்டைவிட குறைவு.
2) திரு. ஜெஸ்லின் தனிஸ்லாஸ் – 12.28% மதிப்பீட்டைவிட அதிகம்.

இதில் திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் 0.18% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 178 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 3**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தையின் உள்பக்கம் IDSMT திட்டத்தின்கீழ் வணிக வளாகம் கட்டப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையிலுள்ளன. மேற்படி கட்டிடத்தின் முதல் மாடியில் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலக பயன்பாட்டிற்கு இடவசதி (900 ச.அ) செய்து தர வேண்டும் எனவும், அரசு நிர்ணயிக்கின்ற வாடகையினை செலுத்த தயாராக உள்ளோம் என தெரிவித்து இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், குளச்சல் கடிதம் அளித்துள்ளார்கள். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**தீர்மானம் எண். 179 மார்க்கட்டின் உள்ளே, சாலையின் மேற்குப்புறமாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் அடிதளத்தில், வடகிழக்கு ஓரமாக அமைந்துள்ள இரண்டு கடைகளையும், இக்கடைகளுக்கு நேர் மேலே மாடியில் அமைந்துள்ள நான்கு கடைகளையும் மின்வாரியம், குளச்சல் அலுவலகத்துக்கு அரசு நிர்ணயிக்கும் வாடகை நிரக்கில் வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சியில் கொட்டில்பாடு பகுதியில் பெண்களுக்கான 4 கழிப்பிடங்கள் உள்ளன. அவற்றில் சேதமடைந்துள்ள கதவுகள் மற்றும் பைப்புகளை மாற்றி மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் ரூ. 1,30,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 180 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சியில் துறைமுகத்தெரு–1 –ல் உள்ள பெண்கள் கழிப்பிடம் எண். 1 மற்றும் 2–ல் உள்ள கதவுகள் மற்றும் பைப்புகள் சேதமடைந்துள்ளது. அதன் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் ரூ. 25,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 181 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சியில் சைமன் காலனி பாலம் முதல் மரமடி சந்திப்பு வரை 3–ம் எண் முதல் 9–ம் எண் வரையிலான 7 பெண்கள் கழிப்பிடங்களின் கதவு மற்றும் பைப் சேதமடைந்து லைட்களும் எரியாமல் உள்ளன. ஆகவே அவற்றை மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் ரூ. 80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 182 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சியில் மரமடி சந்திப்பிலிருந்து அந்தோணியார் காலனி வரை 10–ம் எண் முதல் 16–ம் எண் வரையிலான 7 கழிப்பிடங்கள் உள்ளன பெண்களுக்கான மேற்படி கழிப்பிடங்களில் கதவு மற்றும் பைப் சேதமடைந்து லைட்களும் எரியாமல் உள்ளன. ஆகவே அவற்றை மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் ரூ. 90,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 183 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய வளாகத்தில் கடைகளுக்கு நடுவே பேருந்து நிலையம் உருவாக்கப்பட்ட போது கட்டப்பட்ட கழிப்பிடம் ஒன்று அமைந்துள்ளது. தற்போது புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நவீன கழிப்பிடம் ஒன்று தனியாக கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளதையடுத்து பழைய கழிப்பிடம் தற்போது உபயோகம் இல்லாத நிலையில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொண்டு Rolling shutters அமைத்தால் கூடுதலாக 4 கடைகளை உருவாக்கலாம். அதன் மூலம் நகராட்சிக்கு கூடுதல் வருமானம் நிரந்தரமாக வரும். ஆகவே நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கடைகளாக மாற்றுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 75,000/–க்கு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது,

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 184 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

நகராட்சியில் வரி வசூல் இனங்களான சொத்துவரி, குடிநீர் கட்டணம் போன்றவற்றின் வரி வசூல் மிகவும் மந்த நிலையிலிருப்பதால் அதனை தீவிரப்படுத்தும் நோக்கிலும், மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மட்டும் 45 லட்சமாக இருப்பதாலும், குடிநீர் கட்டணத்தின் வரி வசூலினை முறைப்படுத்தும் விதமாக மூன்று மாதங்களுக்கான குடிநீர் கட்டணத்தை அதற்கடுத்த மாதத்தின் 15 நாட்களுக்குள்ளாக செலுத்த தவறும் பட்சத்தில் மாதமொன்றிற்கு ரூ. 10/– அபராதக் கட்டணமாக மூன்று மாதங்களுக்கு ரூ. 30/– அபராத கட்டணம் வசூலிக்க இந்நகராட்சியின் குடிநீர் துணை விதிகளில் உரிய திருத்தஙிகள் மேற்கொள்ள மன்றம் முடிவு செய்யலாம்.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 185 உறுப்பினர்கள் திரு. இயேசுதாசன் மற்றும் திரு. நசீம் ஆகியோர் மேற்படி பொருளில் சில மாறுதல்களை மேற்கொள்ள ஆலோசனை தெரிவித்தனர். ஆனால் பொருளில் உள்ளவாறே தீர்மானித்திட வேண்டும் என்று, உறுப்பினர்கள், திருமதி. அல்போன்சாள், திருமதி. லதா, திரு. சுரேஸ், திரு. மரிய ஜாண், திருமதி. செலஸ்டீனம்மாள், திரு. லியோண்ஸ், திரு. பின்டோ, திரு. பிரான்ஸிஸ் அமலதாஸ், திரு. ஜாண் லோப்பஸ், திருமதி. ஜாண்சி, திருமதி. லூர்துமேரி, திரு. முருகன், திருமதி. கோமளா, திரு. முனாப், திரு. நூர்முகம்மது, திரு. கலீல் றகுமான், திருமதி. ஷீலா ஜெயந்தி, திருமதி சீதை ஆகியோர் தெரிவித்தனர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் 2006–2007–ம் ஆண்டிற்கு திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு ரூ. 25,26,884/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ. 12,63,442/– நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.66830/2006/அ2 நாள் 27.01.2007 மூலம் வரப்பெற்றுள்ளது. இதில் 50% திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் மொத்த ஒதுக்கீடு தொகையில் ரூ. 12,63,442/– திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் நகர்மன்றத் தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் நகராட்சியில் தற்போது குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் சுற்றுச்சுவர் அமைத்து மண்புழு உரம் தயாரிக்கும் செட் அமைக்குமாறு அறிவுறுத்தியதன் பேரில் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1) இந்திரா காலனியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தை சுற்றிசுற்றுச்சுவர் அமைத்தல். – ரூ. 6.10 லட்சம்.

2) இந்திரா காலனியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் சிமெண்ட் தளம் அமைத்து குப்பைகளை பிரித்து மண்புழு உரம் தயாரிக்கும் செட் அமைத்தல். – ரூ. 6.65 லட்சம்.

மொத்தம் – **ரூ. 12.75 லட்சம்**

இதில் ஒதுக்கீட்டு தொகை போக மீதமுள்ள தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 186 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

அரசாணை (நிலை) எண். 85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (ந.நி) துறை நாள் 22.05.1998–ன்படி குளச்சல் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டு இயஙகி வருகிறது. இந் நகராட்சிப் பகுதியில், 15.10 லட்சம் லிட்டர் குடிநீர் கொள்ளளவு கொண்ட 9 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், சுமார் 95 வால்வுகளைக் கொண்ட 34.50 கி.மீ. நீளத்தில் குடிநீர் பிரதானக் குடிநீர் குழாயுடனும், 2990 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர்ப் பிரிவு இயங்கி வருகிறது. மேற்படி குடிநீர் பிரிவில், மின்பணியாளர் நிலை-II பணியிடம் தவிர வேறு பணியிடங்கள் இந்நகராட்சியில் தோற்றுவிக்கப்படவில்லை.

எனவே, இந்நகரில் குடிநீர் வினியோகப் பணியினைக் கவனிக்க அரசாணை (நிலை) எண். 1255, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 30.09.1998 மற்றும் அரசாணை (நிலை) எண். 196 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.ப.3) துறை நாள் 26.10.1996–ன்படி இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளைத் தோற்றுவித்து அனுமதி வழஙகெ சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர், அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

| வ. எண். | பணியிடம் | அளவுகோல் | நகராட்சியில் உள்ள தற்போதைய விபரம் | தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | குழாய் ஆய்வாளர் | 2000 குடிநீர் இணைப்புக்கு ஒரு பணியிடம் | 2990 குடிநீர் குழாய் இணைப்புகள் | 1 எண்ணம் |
| 2 | குடிநீர் குழாய் லைன் பொருத்துனர் | 30 கி.மீ. நீளம் வரையிலான பிரதான பகிர்மான குழாய்க்கு ஒரு பணியிடம் | 34.50 கி.மீ. நீளம் பகிர்மான குழாய் | 1 எண்ணம் |
| 3. | உதவியாளர் | ஒவ்வொரு தலைமை பணியிடத்திற்கும் ஒரு பணியிடம் | 13 மோட்டார் அறைகள் உள்ளன. 3 மோட்டார் அறைகளை இணைத்து ஒரு தலைமை பணியிடம் வீதம் 4 தலைமை பணியிடம் | 4 எண்ணம் |
| 4. | குழாய் திறப்பவர் | ஒவ்வொரு 30வால்வுகளுக்கும் ஒரு பணியிடம் | 95 வால்வுகள் உள்ளன | 3 எண்ணம். |

அ.குறிப்பு : மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சிக்கு மிகவும் அவசியமாக, தேவையாக பணி மேற்பார்வையாளர் தனது 18.04.2007 ஆம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதாலும், மேற்படி பணியிடங்கள் இல்லாததால் குடிநீர் விநியோகம் பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்வதால், சுகாதாரப் பணிகள் பாதிக்கப்படுவதாலும், இந்நகராட்சிக்கு மேற்படி பணியிடங்களைத் தோற்றுவித்து அனுமதி வழங்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 187 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

__குளச்சல் நகராட்சி மன்றத்தின் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்__

குளச்சல் நகராட்சியில் துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பதற்கு நிரந்தர குடியிருப்பு வீடுகள் ஏதுமில்லாததாலும், குடியிருப்பு வீடுகள் கட்டி கொடுப்பதற்கு நகராட்சிக்கு எல்கைக்குள் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் இல்லாததாலும், இந்நகராட்சி எல்கையையொட்டியுள்ள உப்பளம் பகுதியில் சுமார் 1 ஏக்கர் நிலம் துப்புரவுப் பணியாளர்களின் குடியிருப்புகளுக்காக ஒதுக்கி தர மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைக் கேட்டு இந்த மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 188 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

__குளச்சல் நகராட்சி மன்றத்தின் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்__

குளச்சல் நகராட்சிப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை ஓரளவு தவிர்க்கும் பொருட்டு 19.04.207–ம் தேதி குளச்சல் காவல் நிலையத்தில் வைத்து காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் குளச்சல் நகராட்சி மன்றத் தலைவர் முன்னிலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக குளச்சல் கிளை மேலாளர், திங்கள் சந்தை கிளை மேலாளர் மற்றும் நகராட்சி மன்றத் துணைத் தலைவர் ஆகியோர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மன்றத்தின் பார்வைக்கும், ஆலோசனைக்கும்.

தீர்மானம்:

1) கருங்கலிலிருந்து வரும் அனைத்து அரசு போக்குவரத்து கழக வாகனங்களும், தனியார் போக்குவரத்து கழக வாகனங்களும் கடற்கரை சந்திப்பு, பெரியபள்ளி சந்திப்பு வழியாக அண்ணாசிலைக்கு வந்து பேருந்து நிலையம் சென்று காந்தி சந்திப்பு வழியாக கருங்கல் சாலைக்கு போக வேண்டும். கருங்கலிலிருந்து வரும் போது காந்தி சந்திப்பில் வைத்தே மார்த்தாண்டம் செல்வதற்காக பெயர் பலகையை மாற்றிக் கொள்ள வேண்டும்.
2) அண்ணாசிலையை நோக்கி வரும் வாகனங்கள் (திங்கள் நகர் வழியாக செல்லும் வாகனங்கள் தவிர) அனைத்தும் சுற்றுலா மாளிகை சந்திப்பிலிருந்து தெற்காக செல்லும் சாலை வழியாக பள்ளிச் சாலை வந்து அண்ணாசிலைக்கு வந்து பேருந்து நிலையம் செல்ல வேண்டும்.
3) குளச்சல் பேருந்து நிலையத்திற்கு முன்பாக சாலையில் நிறுத்தி பேருந்திலிருந்து ஆட்களை இறக்கவோ, ஏற்றவோ கூடாது. பேருந்து நிலையத்திற்குள் சென்றுதான் ஆட்களை ஏற்றவோ, இறக்கவோ செய்ய வேண்டும்.

**தீர்மானம் எண். 189 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி